1968 பிப்ரவரி 12]

இருக்கின்ற, இப்பொழுதுள்ள நிலைமையையே வைத்துக் கொண்டு, இதைத் தீவிரப்படுத்தாமல் இருப்பதற்கு சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரின் யோசனைப்படி நடப்பதாக உத்தேசமில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் சர்க்கார் கொடுக்கிற விகிதாசாரப்படி, டார்ஜெட்டை முடிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, தவறான முறையில் அது பயன் படுத்தப்பட்டு தனிப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் மட்டும் அதிகமாக இதிலே கருத்தடை செய்து கொள்வதற்கு கிராமங்களிலே அதிகாரிகளால் நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? புள்ளிவிவரப்படி தஞ்சை ஜில்லாவில் 1966-67-இல் 21,000 பேர்கள் செய்து கொண்டார்கள். இதில் 19,000 பேர்கள் ஹரிஜனங்களுக்கும், பாக்கி 2,000 பேர்கள் பிற்பட்ட வகுப்பினரும் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா? இத்தகைய நடவடிக்கைகளில் தாராளமாக, மனமுவந்து செய்து கொள்பவர்கள் மட்டும் செய்து கொள்ளும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிட்ட தவறு கள் நடப்பதாக உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். கருத் தடை செய்துகொள்பவர்களுக்கு கட்டாயமாக செய்துவைக்கப் படவில்லை, அவர்கள் மனமுவந்து செய்துகொள்ளுகிறார்கள்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவரவர்களே, மாவட்டக் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளை நியமிப்பதைவிட, குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர் களுக்கு சிறந்த வசதிகள் செய்து கொடுத்து, பிரயாணச் செலவை யும் கொடுத்து மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்யச் சொல்ல உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குடும்பக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கும் அரசியல் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் தங்கள் செலவில் இந்தக் காரியத்தைச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடி வடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அவையுரிமைக் கேள்வி.

திரு. சி. சுப்பிரமணியம் மீதும், 'இந்து' நாளிதழ் மீதும்.

• **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து அவையுரிமைக் கேள்வி. மாண்புமிகு திரு. இளம்வழுதி அவர்கள் ஒரு அவை உரிமைக் கேள்விக்கு முன் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

Thiru ERE. ELAMVAZHUTHI : Sir, under rule 184 of the Madras Assembly Rules, I hereby give notice that I wish to raise the following matter of privilege against (1) Thiru C. Subramaniam and (2) the Publisher of 'The Hindu', Madras, in respect of the following passage occurring in 'The Hindu', dated 11th February 1968, page 11, column 2, under the sub-heading "Political Fraud", viz.,—

"Mr. Subramaniam described the recent language bill adopted by the State Assembly as the 'biggest political fraud'."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த முன்னறிவிக்கையானது தகுந்த நேரத்தில் கொடுக்கப்படாமையால் எனக்கு இதைக்குறித்து ஆராய நேரமில்லாத காரணத்தால் இதுபற்றி நாளை சொல்வதாக இருக்கிறேன். அதற்கு முன்னால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவையில் நடந்த சம்பவங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அண்மையில் கோவையில் நடந்த சம்பவங்களையொட்டி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கையில் உள்ள சில குறிப்புகள் நமது விதிகளுக்குப் புறம்பானவையாக இருக்கும் என்ற காரணத்தால் அந்தக் குறிப்புகளை நீக்கிவிட்டு, அவர்கள் மீண்டும் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்தப் பேரவைக்குத் கொண்டுவர அனுமதிக்கலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம்.

Dr. H. V. HANDE : I wish to withdraw the adjournment motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றியும் அனுமதிக்கப்படுமா, இல்லையா என்பதைப்பற்றி நாளை நான் முடிவு சொல்வதாக இருக்கிறேன்.